APRIL 2026 **60588/318C5A**

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. Define Cost Accounting.

   அடக்கவிலை கணக்கியல் - வரையறு.

2. Give the meaning of Activity Based Costing.

   செயல் அடிப்படை அடக்கவியலின் பொருள் தருக.

3. List out the objectives of purchasing department.

   கொள்முதல் துறையின் நோக்கங்களைப் பட்டியலிடுக.

4. What are the methods adopted to Control Inventory?

   சரக்கிருப்பினை கட்டுப்படுத்தும் முறைகள் யாவை?

5. What is idle time?

   வீணான காலம் என்றால் என்ன?

6. Mention the objectives of Time-Keeping.

   நேரத்தை பேணுதலின் நோக்கங்களை குறிப்பிடுக.

7. Give the meaning of 'Allocation of Overheads'.

   மேற்செலவுகளை பகிர்வு என்பதன் பொருள் தருக.

8. List out the methods of absorption of overheads.

   மேற்செலவு உள்ளிழுத்தலின் முறைகளை பட்டியலிடுக.

9. What is Unit Costing?

   அலகு அடக்கவியல் என்றால் என்ன?

10. Write any two objectives of Transport Costing.

    போக்குவரத்து அடக்கவியலின் ஏதேனும் இரு நோக்கங்களை எழுதுக.

11. What are running charges? Give examples.

ஓடுதள செலவுகள் யாவை? உதாரணம் தருக.

12. Mention some industries in which process costing is usually employed.

படிமுறை அடக்கவியலை வழக்கமாக உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகள் சிலவற்றை குறிப்பிடுக.

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. State the various elements of cost.

அடக்கவிலையியலின் பல்வேறு உட்கூறுகளை விவரி.

14. A factory produces 100 units of commodity. The cost of production is :

	Rs.
Direct materials	10,000
Direct wages	5,000
Direct expenses	1,000
Factory overheads	6,500
Administrative overheads	3,480

If profit of 25% on sales is to be realised what would be the selling price of each unit of the commodity? Prepare the cost sheet.

ஒரு தொழிற்சாலை 100 அலகுகள் பொருட்களை உற்பத்தி செய்கிறது. அதன் உற்பத்தி செலவுகள்,

	ரூ.
நேரடி மூலப்பொருட்கள்	10,000
நேரடி கூலி	5,000
நேரடி செலவுகள்	1,000
தொழிற்சாலை மேற்ச்செலவுகள்	6,500
நிர்வாக மேற்ச்செலவுகள்	3,480

விற்பனையில் இலாபம் 25% ஆக இருக்கும்பொழுது அலகு பொருளின் விற்பனை விலை என்ன? அடக்க விலைத் தாள் தயாரிக்க.

15. From the following information, calculate:

(a) Maximum stock level,

(b) Minimum stock level,

(c) Re-order level

(d) Average stock level.

Minimum consumption – 240 units per day.

Maximum consumption – 420 units per day.

Normal consumption – 300 units per day.

Re-order quantity – 3,600 units.

Re-order period – 10-15 days.

Normal re-order period – 12 days.

கீழ்வரும் விபரங்களைக் கொண்டு,

(அ) உயர்ந்த சரக்கிருப்பு நிலை,

(ஆ) குறைந்த சரக்கிருப்பு நிலை,

(இ) மறு-கொள்முதல் நிலை மற்றும்

(ஈ) சராசரி சரக்கிருப்பு நிலைகளை கணக்கிடுக.

குறைந்த அளவு நுகர்வு – ஒரு நாளைக்கு 240 அலகுகள்.

உயர்ந்த அளவு நுகர்வு – ஒரு நாளைக்கு 420 அலகுகள்.

இயல்பான நுகர்வு – ஒரு நாளைக்கு 300 அலகுகள்.

மறு ஆணை அளவு - 3,600 அலகுகள்.

மறு கொள்முதல் காலம் – 10 முதல் 15 நாட்கள்.

இயல்பான மறுகொள்முதல் காலம் – 12 நாட்கள்.

16. Calculate the normal and overtime wages payable to a workman from the following data :

Days	Hours worked
Monday	8
Tuesday	12
Wednesday	10
Thursday	10
Friday	09
Saturday	04
	53

Normal working hours – 8 hours per day; on Saturday – 4 hours.

Normal rate – Rs. 2 per hour.

Overtime rate – upto 9 hours in a day at single rate and over 9 hours in a day at double rate. Or upto 48 hours in a week at single rate and over 48 hours at double rate, whichever is more beneficial to the workers.

ஒரு தொழிலாளியின் கீழ்வரும் விவரங்களைக் கொண்டு, இயல்பான மற்றும் மிகைநேர கூலி செலுத்தப்படுவதைக் கணக்கிடுக :

நாட்கள்	வேலை செய்த நேரம்
திங்கள்	8
செவ்வாய்	12
புதன்	10
வியாழன்	10
வெள்ளி	09
சனி	04
	53

இயல்பான வேலை நேரம் – ஒரு நாளைக்கு 8 மணி நேரம், சனிக்கிழமை - 4 மணிகள்.

இயல்பான கூலி ஒரு மணி நேரத்திற்கு - ரூ. 2.

மிகைநேர கூலி வீதம் - ஒரு நாளைக்கு 9 மணிக்குள்ளாக இருந்தால் ஒற்றை கூலி வீதமும், 9 மணி நேரத்திற்கு மேலாக இருந்தால் இரட்டை கூலி வீதமும், வழங்கப்படுகிறது. அல்லது ஒரு வாரத்திற்கு 48 மணி நேரத்திற்குள்ளாக இருந்தால் ஒற்றை கூலி முறையும் மற்றும் 48 மணி நேரத்திற்கு மேல் இருந்தால் இரட்டை கூலி முறையும், இதில் தொழிலாளிக்கு எது அதிக பயன் உள்ளதாக இருக்கிறதோ அதை பின்பற்ற வருகிறது.

17. Distinguish between allocation and apportionment.

ஒதுக்கீடு மற்றும் பங்கீடு வேறுபடுத்துக.

18. The account of a radio manufacturing company disclosed the following information for the year ending 31st Dec. 2020:

	Rs.
Material used	50,000
Productive wages	40,000
Works overhead expenses	8,000
Office overhead expenses	4,900

Prepare the cost sheet for the year ending 31st Dec. 2020, and also calculate the price which the company should quote for the manufacture of a radio in 2021. Requiring materials valued at Rs. 250 and wages of Rs. 150, so that the price may yield a profit of 20% on cost.

ஒரு ரேடியோ உற்பத்தி செய்யும் நிறுமத்தின் 31-டிசம்பர் 2020-ல் முடிவுறும் ஆண்டுக்கான கணக்குகள் கீழ்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

	ரூ.
மூலப்பொருள் பயன்படுத்தியது	50,000
உற்பத்தி கூலி	40,000
தொழிற்சாலை மேற்செலவுகள்	8,000
அலுவலக மேற்ச்செலவுகள்	4,900

31 டிசம்பர் 2020 முடிவுறும் ஆண்டுக்குரிய அடக்கவிலைத் தாள் தயாரிக்க, மேலும் ரேடியோ தயாரிப்பாளர்கள் 2021 ஆம் ஆண்டிற்கான கோரிய விலைப்புள்ளியையும் கணக்கிடுக. அதில் மூலப்பொருள் மதிப்பு - ரூ. 250 மற்றும் கூலிகள் - ரூ. 150 மற்றும் அடக்கத்தில் 20% இலாபம் ஈட்டுவதாக கொள்க.

19. Calculate the cost of output and abnormal Loss/Gain.

Cost of process :	Rs.
Materials	20,000
Wages	25,000
Overheads	5,500
Normal loss	10%
Input	1,000 units
Abnormal loss	100 units
Scrap value	Rs. 1,000

உற்பத்தி அடக்க செலவு மற்றும் மிகை/அசாதாரண நட்டம் மற்றும் அசாதாரண ஆதாயத்தைக் கணக்கிடுக.

படிமுறை அடக்கம் :	ரூ.
மூலப்பொருள்கள்	20,000
கூலிகள்	25,000
மேற்ச்செலவுகள்	5,500
சாதாரண நட்டம்	10%
உள்ளீடு	1,000 அலகுகள்
அசாதாரண நட்டம்	100 அலகுகள்
எறிமதிப்பு	ரூ. 1,000

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. Discuss the various classifications of cost.

அடக்கத்தின் பல்வேறு வகைப்பாடுகளைப் பற்றி விவாதிக்க.

21. 2023

Jan	5	Purchased	4,000 units at Rs. 4 per unit.
	20	Purchased	500 units at Rs. 5 per unit
Feb	5	Issued	2,000 units
	10	Purchased	6,000 units at Rs. 6 per unit.
	15	Issued	4000 units
	18	Issued	1000 units
March	4	Issued	2,000 units
	12	Purchased	4,500 units at Rs. 5.50 per unit
	24	Issued	3,000 units

From the above particulars prepare stores ledger account under :

(a) LIFO method,

(b) Simple average method.

2023

ஜனவரி	5	கொள்முதல்	4,000 அலகுகள் அலகு ஒன்று ரூ. 4 வீதம்
	20	கொள்முதல்	500 அலகுகள் அலகு ஒன்று ரூ. 5 வீதம்
பிப்ரவரி	5	வழங்கியது	2,000 அலகுகள்
	10	கொள்முதல்	6,000 அலகுகள் அலகு ஒன்று ரூ. 6 வீதம்
	15	வழங்கியது	4000 அலகுகள்
	18	வழங்கியது	1000 அலகுகள்
மார்ச்	4	வழங்கியது	2,000 அலகுகள்
	12	கொள்முதல்	4,500 அலகுகள் அலகு ஒன்று ரூ. 5.50 வீதம்
	24	வழங்கியது	3,000 அலகுகள்

மேற்கூறிய விவரங்களைக் கொண்டு, சரக்கு இருப்பு கணக்கினை,

(அ) கடைசியில் வாங்கியது முதலில் வழங்கியது (LIFO)

(ஆ) சாதாரண சராசரி முறை (Simple Average Method) தயாரிக்க.

22. Calculate the earning of a worker under the following methods :

(a) Time rate method

(b) Piece rate method

(c) Halsey plan

(d) Rowan plan

Information given :

Standard time 30 hours,

Time taken 20 hours

Hourly rate of wages – Re.1/per hour plus a dearness allowance at 50 paise per hour worked.

கீழ்காணும் முறைகளை பயன்படுத்தி, ஒரு தொழிலாளியின், வருவாயினைக் கணக்கிடுக :

(அ) நேர வீத முறை

(ஆ) அலகு வீத முறை

(இ) ஹால்சி திட்டம்

(ஈ) ரோவன் திட்டம்

கொடுக்கப்பட்ட தகவல்கள் :

நிலையான நேரம் 30 மணிகள்,

எடுத்துக்கொண்ட நேரம் - 20 மணிகள்,

ஒரு மணி நேர கூலி - ரூ. 1, மற்றும் ஒரு மணி நேர வேலைக்கு அகவிலைப்படி 0.50 பைசா ஆகும்.

23. A manufacturing concern has three productions departments and two service departments. In July 2008, the departmental expenses where as follows :

Production departments	Rs.
A	16,000
B	13,000
C	14,000
Service departments	**Rs.**
X	4,000
Y	6,000

The service department expenses are charged out on a percentage basis,

	A	B	C	X	Y
Expenses of department X	20%	25%	35%	–	20%
Expenses of department Y	25%	25%	40%	10%	–

Prepare a statement of secondary distribution under repeated distribution method.

ஒரு உற்பத்தி நிறுவனம் மூன்று உற்பத்தி துறைகளையும், இரண்டு சேவை துறைகளையும் கொண்டுள்ளது. ஜூலை 2008ல் துறைகளின் செலவுகள் கீழ்ருமாறு :

உற்பத்தி துறைகள்	ரூ.
A	16,000
B	13,000
C	14,000
சேவைத் துறைகள்	**ரூ.**
X	4,000
Y	6,000

சேவைத் துறைகளின் செலவுகல் வழிக்காட்டு வீதத்தில் பிரிக்கப்படுகின்றன.

	A	B	C	X	Y
துறை X-ன் செலவுகள்	20%	25%	35%	–	20%
துறை Y-ன் செலவுகள்	25%	25%	40%	10%	–

இரண்டாம் நிலை பகிர்விற்கான அட்டவணையை திரும்ப பகிர்வு முறை மூலம் தயாரிக்க.

24. From the following data relating to vehicle X calculate the cost per running kilometer and ton km.

	Vehcile X
Kilometers run (annual)	15,000
Tonnes per km (average)	6
Cost of vehicle	Rs. 25,000
Road license (annual)	Rs. 750
Insurance (annual)	Rs. 700
Garage rent (Annual)	Rs. 900
Supervision and salaries	Rs. 2,400
Drivers wages per hour	Rs. 3
Cost of fuel per litre	Rs. 3
Kilometers run per liter	20
Repairs and maintenance per km	Rs. 1.75
Tyre allocation per km	90 paise
Estimated life of vehicle	1,00,000 kms

Charge interest at 5% p.a. on cost of vehicle. The vehicle runs 20 kms per hour on an average.

வண்டி X தொடர்புடைய தகவல்கள் பின்வருமாறு, அதனைக் கொண்டு ஒரு மைல் ஓட்டத்திற்குரிய அடக்கம் மற்றும் ஒரு டன் கிலோ மீட்டர் அடக்கத்தையும் கண்டுபிடி.

	வண்டி 'X'
மைல் ஓட்டம் (ஆண்டுக்கு)	15,000
டன் ஒரு கிலோமீட்டர் (சராசரி)	6
வண்டியின் மதிப்பு	ரூ. 25,000
சாலைவரி (ஆண்டுக்கு)	ரூ. 750
காப்பீடு (ஆண்டுக்கு)	ரூ. 700
திறுத்துமிட வாடகை (ஆண்டுக்கு)	ரூ. 900
மேற்பார்வை மற்றும் சம்பளம்	ரூ. 2,400
ஓட்டுநர் கூலி (ஒரு மணிக்கு)	ரூ. 3
ஒரு லிட்டர் பெட்ரோல்	ரூ. 3
ஒரு லிட்டருக்கு ஓடும் தூரம்	20
பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு (ஒரு கிலோ மீட்டர்)	ரூ. 1.75
ஒரு கிலோ மீட்டர்குரிய டயர் செலவு	90 பைசா
எதிர்பார்க்கும் உழைக்கும் காலம்	1,00,000 கிலோமீட்டர்

வண்டியின் அடக்கத்தில் 5% வருடத்திற்கு வட்டி கணக்கிடப்படுகிறது. சராசரியாக ஒரு மணி நேரத்திற்கு 20 கிலோமீட்டர் வண்டி ஓடுகிறது.

———————